**செய்தி வெளியீடு எண்: 109** **நாள்: 06.02.2020**

<u>செய்திக் குறிப்பு</u>

## தேவநேயப் பாவாணரின் 118வது பிறந்தநாள் விழா!
## பலதுறை அறிஞர்கள் பெருந்திரளாக பங்கேற்பு!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக தமிழ்க் கலைக்கழகத்தின் 55வது கூட்டம் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் தேவநேயப் பாவாணரின் பிறந்தநாளான 07.02.2020 அன்று நடைபெறுகிறது. முற்பகல் தமிழ்க் கலைக்கழகக் கூட்டமும் பிற்பகல் 2 மணி அளவில் தேவநேயப் பாவாணரின் பிறந்த நாள் விழாவும், 2020 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு விருது பெற்ற தமிழ்க் கலைக்கழகத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களாகிய **புலவர் வெற்றியழகனார்(**கபிலர் விருது), **திரு. அ. மதிவாணன் (**மொழியாக்க வல்லுநர் விருது), **பேராசிரியர் நா.சு.சிதம்பரம்(**அறிவியல் எழுத்தாளர் விருது) ஆகியோருக்கு பாராட்டு விழாவும் நடைபெறுகிறது. விழாவிற்கு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் **திரு. தங்க. காமராசு** தலைமை ஏற்க, மக்கள் தொலைக்காட்சி முதன்மைச் செய்தி ஆசிரியர் **திரு. கூ. பாஸ்கரசந்திரன்** அவர்களும், மக்கள் இந்திய ஆட்சிப்பணிக் கழகத்தின் இயக்குநர் **திரு. மு. சிபிகுமரன்** அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாகவும், செய்தி 7 (நியூஸ்7) தமிழ்த் தொலைக்காட்சியின் முதன்மை நெறியாளர் **திரு. இரா. விஜயன்** அவர்கள் சிறப்பு நோக்கராகவும், தமிழ்க் கலைக்கழகத்தின் மதிப்புறு உறுப்பினர்கள், அலுவல்சார், அலுவல்சாரா உறுப்பினர்கள் மற்றும் சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரி மாணவர்கள் பார்வையாளராகவும் பங்கேற்கவுள்ள இக்கூட்டத்தில் 550 கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**